**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 182/2019 |
| Name | : Nagaraj |
| P.W. | : |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : /2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of . 27.11.2023

**முதல் விசாரணை**

நான் மடத்துக்குளத்தில் வசித்து வருகிறேன். சலவை மில்லிற்கு வேலைக்கு செல்கிறேன். 13.04.2016 காலை 11.00 மணிக்கு நானும் என் மனைவி மகன் எல்லாம் வீட்டிலிருந்த போது எங்கள் வீட்டில் மேசன் வேலை செய்த போது சதாசிவம், கிருஷ்ணமூர்த்தி, மதிவாணன், மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் வேலை செய்யக் கூடாது எனக் கூறி என் மகனிடம் தடுத்து பிரச்சனை செய்தார்கள். அப்போது என் மகன் மேசனை வேலை செய்ய சொன்னபோது எதிரிகள் என்னடா நாங்கள் சொல்வதை கேட்கமாட்டாய என்று சொல்லி தகாத வார்த்தையால் பேசி அடித்துவிட்டார்கள். நான்போய் கேட்ட போது என்னையும் என் மனைவியையும் அடித்துவிட்டார்கள். உடனே எங்களை

ஆம்புலன்ஸ் மூலம் முதலில் மடத்துக்குளம் அரசு மருத்துவமனைக்கு சென்று முதலுதவி சிகிச்சை எடுத்துக்கொண்டு உடுமலை அரசுமருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு கொண்டு சேர்த்தார்கள். மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது மடத்துக்குளம் போலீசார் புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். நான் 19 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) என் வீட்டிற்கு கிழபுறம் பாலகிருஷ்ணன் வீடு உள்ளது என்றால் சரிதான். அக்கம் பக்கம் வீடு உள்ளது. என் மகனை எதிரிகள் தாக்கியதை நான் நேரடியாக பார்த்தேன். போலீஸ் விசாரணையில் மேற்கண்ட விவரத்தை நான் குறிப்பிட்டுள்ளேன். சம்பவம் நடந்த இடத்தில் நான், எனது மனைவி, மகன், மாமனார், மாமியார் மற்றும் அக்கம் பக்கத்தில் நிறைய பேர் இருந்தார்கள். நான் எதிரி மீது தாக்கல் செய்த சிவில் வழக்கு எண். தெரியாது. ஆனால் வழக்கு விவரம் தெரியும். எனது வழக்கு நடத்தாமல் தள்ளுபடியானது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அசல் வழக்கு எண்.213/2019 வழக்கானது கடந்த 29.09.2021 ம் தேதி இந்நீதிமன்றத்தில் தள்ளுபடியானது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

(2) சதாசிவம் கழுகரையில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். இந்த வழக்குச் சம்பவமானது என் மகன் பாலகிருஷ்ணன் இடத்தை ஆக்கிரமித்து கட்டியதால் அது குறித்து கேட்டதால் எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. மேலும் நாங்கள் வீடு கட்டிய இடத்திற்கு கரூர் வைசியா வங்கி லோன் கொடுத்துள்ளது. நாங்கள் சரியாகத்தான் கட்டியுள்ளோம். அது தற்போது பாதியிலேயே கட்டுமானம் உள்ளது. எதிரிகள் தாக்கியதில் எனக்கு இடது முழங் கை, வலது முழங்கால் மற்றும் வலது கை ஆள் காட்டி விரலில் காயம் ஏற்பட்டது. என்னை யார் ஆம்புலன்ஸில் ஏற்றிவிட்டார்கள் என்று எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. நான் சொன்னபடி சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என் வீட்டைச் சுற்றி உறவினர்கள் நிறைய பேர் உள்ளதால் வழக்குச் சம்பவம் நடைபெற வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் எனது முதல் விசாரணையிலும், போலீஸ்

விசாரணையிலும், தற்போது முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

K VIJAYAKUMAR

Digitally signed by K VIJAYAKUMAR
Date: 2023.11.27 09:19:30 +0200

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்